JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
OCT 24

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

# இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம் : விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳. அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356 பிரதி விலை: சதம் 10.

[புத்-எகூ] யாழ்ப்பாணம்- பிலவங்க௵ புரட்டாதி௴ ௨௦௳ வெள்ளிக்கிழமை (6-10-1967) [இல-௨௫]

## கடவுள் திரு வடிவங்களும் அவதாரங்களும்

[ திரு. நா. செல்லப்பா, வண்ணார்பண்ணை ]

ஆன்மாக்களுடைய பக்குவ நிலைக்கேற்ப இறைவனுடைய அனுக்கிரகம் உண்டாகிறது. மும்மலங்களாலும் பீடிக்கப்பட்ட சகலர்களுக்குப் படர்க்கை நிலையிலும் இரு மலங்களால் பாதிக்கப்பட்ட பிரளயாகலர்க்கு முன்னிலையிலும் ஆணவமாகிய ஒரு மலத்தினால் மட்டும் கட்டுண்ட விஞ்ஞானகலர்க்குத் தன்மை நிலையிலும் சிவன் அருள் புரிகின்றான் என்கிறது சிவஞானபோதம். எனவே சிவ தரிசனம் ஆன்மாக்களுக்கு எவ்வகையில் கிடைக்கின்றதென்பது ஆன்மாக்களையே பொறுத்ததாகும்.

கடவுள் என்னும் பதம் த[illegible]ம். அதன் பொதுவான பொருள் உள்ளமாகிய மனத்தைக் கடந்தது என்பதாகும். அவதாரம் என்னும் சொல் வடமொழியைச் சேர்ந்ததாகும். அதன் தமிழ்ப் பொருள் பிறத்தல் இறங்குதல் பிரிதல் எனும்படி பலவாகும். கடவுள் அவதரிக்கிறார் என யாரும் கருதுவதாயின் அவர் ஒரு தாய் வயிற்றில் யோனி வாயிலாகப் பிறக்கிறார் என்பதையே பொதுவாகக் குறிக்கும். ஆன்மாக்கள் தான் பிறப்பு இறப்பு உடையன. ஆன்மாக்கள் தான் மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனும் அந்தக் கரணங்களைக் கொண்டு சுட்டி அறிவன. உள்ளத்தைக் கடந்த கடவுள் மனிதனாகப் பிறந்து விட்டால் அவருக்கு இறப்பாகிய நிலைப்பிரிவு ஏற்படும். மேலும் உள்ளமாகிய மனத்தில் கட்டுப்பட ஏதுவாகும். அதனால் வியாபக அறிவு நீங்கிச் சுட்டியறியும் தன்மை உண்டாகும்.

சிவனை வழிபடும் சைவர்கள் கடவுள் இலக்கணத்துக்கு மாறாகிய மனித அவதாரத்தை அவர் பெறுவார் எனக் கருதுவதில்லை. மேலும் சிவன் மனித அவதாரம் பெற்றால் எல்லோரும் தரிசிக்கக்கூடிய நிலை ஏற்படும். அப்படியான ஒரு நிலை ஏற்படின் ஆன்மாக்களுடைய பக்குவநிலைக்கேற்பவே சிவனுடைய தரிசனம் கிட்டும் என்னும் சித்தாந்தக் கொள்கை பொய்யாகிவிடும்.

சிவன் சீவன்களிடம் உள்ள கருணை மேலீட்டினால் உருவத் திருமேனி எடுக்கிறார் என்பதற்கும் அவதரிக்கிறார் என்பதற்கும் எவ்வளவோ கருத்து வேறுபாடு உண்டு. உருவத் திருமேனி எடுத்தலையும் மனிதனாக அவதரித்தலையும் ஒன்றென நாம் மயக்கமுற்று விபரீதவிளைவுகளைத் தேடிக்கொள்ளக் கூடாது. சங்கரன் உருவத்திருமேனி எடுப்பான் என்பதை உண்மைச் சைவரும் மறுக்கமாட்டார்கள். உருவத் திருமேனி எடுக்கும் சிவன் பக்குவம் அடைந்த ஆன்மாக்களுக்கு [illegible] தரிசனம் கொடுப்பார். ஆனால் மனித அவதாரத்தைப்போல் உலகில் பல வருடங்கள் தங்கி நின்று எல்லோருக்கும் காட்சி அளிப்பான் என்பதில்லை.

"நலமிலன் நண்ணார்க்கு;
நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

என்பது திருவருட் பயன்.

அஃது இங்ஙனமாக, இக்கலியுகத்தில் யோனி வாயிலாக மனித நிலையில் பிறந்து பூர்வ புண்ணிய வசத்தால் சில அரிய சித்திகளையும், உயர்ந்த ஞானத்தையும் பெற்று, அவற்றின் ஆற்றல்களை நமக்குக் காட்டி ஒருசில சித்தர்கள் தம்மைத் தாமே சிவனின் அவதாரம் என்னும்பொழுது சைவசித்தாந்திகளாகிய நாம் சிறிதாயினும் சிந்தித்து ஒரு முடிவு காணக் கடமைப்பட்டுள்ளோம். சிவனுடைய திருஉருவத் தோற்றமும் பஞ்சகிருத்தியங்களும் அவனுடைய சங்கற்ப மாத்திரையிலே நிகழ்வன. மனித அவதாரம் பெற்ற மற்றும் தெய்வங்களின் தோற்றமும் செயலும் சங்கற்ப மாத்திரையிலே நிகழ்வன அல்ல. அத்துவாக்கள் எனும் கருவாயிலாக நிகழ்வன. தம்மைச் சிவனுடைய அவதார புருஷர் எனக் கூறிச் சுயவிளம்பரம் செய்யும் ஒருவர் ஆற்றும் அற்புதங்களும் செயல்களும் உண்மையில் சிவனுடைய ஐந்தொழிலைப் போலச் சங்கற்ப மாத்திரையில் நிகழ்வன அல்ல. மும்மூர்த்திகளாலேயே பஞ்சகிருத்தியங்கள் யாவையும் ஒருப்படச் செய்ய இயலாது. அப்படியாயின் மானிடனாக அவதரித்த சித்தரோ அன்றி வேறோர் தெய்வமோ பஞ்சகிருத்தியங்களையும் செய்ய முடியுமா?

பஞ்ச கிருத்தியங்களையும் தெளிவுறக் குறிப்பது நடராஜ உருவம். பஞ்சாட்சரமும் அதையே பொதுவாகக்

( தொடர்ச்சி 2-ம் பக்கம் )

சிவமயம்

வேண்டா மரைக்கன்றி
நின்பதந் தாங்களென்
வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகோ
லோசக மேழுமளித்
துண்டான்உறங்கஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும்
வண்ணம்
கண்டான் சுவைகோள்
கரும்பே!
சகல கலாவல்லியே!!.
— குமரகுருபரசுவாமிகள்.

## நாவலர் நல்வாக்கு

நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப்படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

## எமது புதிய அதிபர்

சென்ற 1959-ம் ஆண்டிலிருந்து எமது சைவப் பிரகாச அச்சு யந்திரசாலையின் அதிபராகக் கடமையாற்றியவரும் ஷை ஸ்தாபனத்தை நன்னிலைக்குக் கொண்டு வந்தவருமாய உயர்திரு. ஐ. சின்னத்துரை அவர்கள் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டதால், சென்ற 1-10-67 முதல் புன்னாலைக்கட்டுவனைச் சார்ந்த பிரம்மஸ்ரீ. க. செ. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களை நமது புதிய அதிபராக நியமித்துள்ளோம் என்பதை வாசக நேயர்கட்கும் அன்பர்கட்கும் அறியத் தருகின்றோம்.

## நாடெங்கும் கொண்டாடும் நவராத்திரி பூஜை

— பண்டிதர் செ. சிவப்பிரகாசம் —

(முற்றொடர்-2)

மகிடாசுரன் பின்பு எருமை வடிவம் தாங்கித் தேவியோடு பல மாயைகள் செய்து போர் செய்தான். அப்போது மகிடாசுரனைக் கீழே தள்ளி அவனது தலையைத் துண்டித்து யுத்தத்தை முற்றுவித்துத் தேவர்களுக்கும் மும்மூர்த்திகளுக்கும் இன்பத்தை ஊட்டினாள் தேவி. இதனாலேயே தேவிக்கு மஹிஷாசுர மர்த்தனி என்னும் பெயர் உண்டாயிற்று. மகிடாசுரன் வாழ்ந்த நாடே எருமை நாடு என வழங்கப் பெறும் இது மைசூர்ப் பகுதியாகும். மஹிஷாசுர மர்த்தனியையும் மகா நவமியையும் இந்தியாவிற் பல இடங்களிலே கொண்டாடி வருகின்றனர். அசோகன் காலம், விஜய நகர மன்னர் காலங்களுக்கு முன்னும் இக் கொண்டாட்டம் நடந்து வந்திருக்கிறது. மேற்கு இந்திய மக்கள் ( இந்தியாவின் மேற்கே உள்ளவர்கள் ) ஒரு கல்லை நட்டு அதிலே செந்தூரம் பூசி " மஹிசோபா " என்று இம் மகா நவமி நாட்களை கொண்டாடுகின்றார்கள். வட இந்தியாவில் நவராத்திரி நாள்களில் " ராம லீலா " கொண்டாடுகிறார்கள். இராமர் இராவணனை மகா நவமியிலன்று கொன்றார் என்னும் செய்தியை இது நினைவுறுத்துகின்றது. தென்னாட்டார் " தசரா " என்று கொண்டாடுவார்கள்;

வெற்றியைக் கொடுக்கும் ஆயுதங்களையும், போர்க்கருவிகளையும், யானை, குதிரை முதலிய வற்றையும் விஷேசமாக இந்நாட்களில் பூசிப்பர்.

இந்த மஹா நவமி விழாவில் கடைசி மூன்று நாட்களும் துர்க்காஷ்டமி, மஹா நவமி, விஜய தசமி என அழைக்கப்படும். இம் மூன்று நாட்களும் மிக விஷேசம் பெற்றவை. விஜய தசமியிலே வித்தியாரம்பம் முதலிய பல சுப கருமங்கள் செய்யப்படும்.

இங்ஙனமாக நவராத்திரி என்றும், தசரா என்றும் மஹிசோபா என்றும் பல பெயர்களால் இந்த ஒன்பது நாட்களும் நாடெங்கும் கொண்டாடப் படுகின்றது.

சீக்கியமதத்தினரும் சண்டி என்ற பெயராலே தேவியை வழிபடுகின்றார்கள். குரு கோவிந்சிங் 'சண்டி திவார்' என்னும் காவியத்தைத் தேவி மேலே பாடியுள்ளார்.

எனவே நவ சத்தி அருள் பொழியுஞ் சிவ சத்தி வழிபாடே நவராத்திரி பூஜையாகும். அப் பூஜை நாட்களில் எல்லோரும் தேவியை வழிபட்டு அப்பரா சத்தியின் பரங் கருணைத் தடங்கலிற் படிந்தின்புற்று இனிது வாழ்வார்களாக!

## நவராத்திரி விழா

கொழும்பில் :

கொழும்பு விவேகானந்தசபையின் ஷை விழா இம்முறை கலை விழாவாகக் கொண்டாடப்படும்.

ஷை தினங்களில் இயல், இசை, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

X X X

கந்தர்மடம்:

யாழ் - கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் 4-10-67 முதல் 12-10-67 வரை நவராத்திரி விழா வெகு கோலாகலமாகக் கொண்டாடப் பெறும்.

முதல் எட்டு நாட்கள் மாணவர்களின் உபயமாகவும் 9-ம் நாள் மாணவர்-ஆசிரியர் - அபிமானிகள் ஆகியோரின் உபயமாகவும் இடம்பெறும்.

X X X

புத்தளத்தில்:

புத்தளம் சைவ முன்னேற்றச் சங்க ஆதரவில் ஷை விழா புத்தளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும்.

X X X

காரைநகரில்:

காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 4-10-67 முதல் 12-10-67 வரை ஷை விழா நடைபெறும்.

தினமும் மாலை 5 மணிமுதல் விஷேச அபிஷேக சோடசோபசார ஆராதனைகளும் 7-30 முதல் 8-30 வரை நியாய சிரோமணி பிரம்ம ஸ்ரீ இ. சுப்பிரமணியசாஸ்திரிகளின் உபந்நியாசமும் இடம் பெறும்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## எங்கள் அறிவித்தல்

எதிரே வரும் 12-10-67 வியாழக்கிழமை (புரட்டாதி மீ ௨௬ ௳) விஜயதசமித் திருநாளை முன்னிட்டு எமது காரியாலயத்தில் கருமமாற்றுவோர்க்கு விடுமுறையாதலால் அன்று இங்கு காரியாலயசம்பந்தமான கருமங்கள் நிகழா என்பதை அன்பர்கட்குத்தெரிவிக்கிறோம். —அதிபர்


# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

பிலவங்கஹு புரட்டாதி மீ ௨௰ - ௳ வெள்ளிக்கிழமை [1967]


## சிறுவர் கல்வி

1968 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐந்துவயது பூர்த்தியான பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்தற்கு 31-7-67 - க்கு முன்னதாகவே பெற்றோர் மனுச் செய்திருத்தல் வேண்டும். வட்டாரச் சட்டத்தினால் (Area rule) பெற்றோர் தாம் விரும்பும் பாடசாலைகளில் தம் பிள்ளைகளைச் சேர்க்க இயலாது. நான்கு வருடம் பதினொருமாதம் நிரம்பிய பிள்ளைகளையும் பாடசாலைகளில் சேர்க்கலாம் என்ற ஒரு அறிக்கையையும் 31-7-67 க்குப் பின்னர் கல்விப்பகுதியினர் வெளியிட்டுள்ளனர். ஆகவே புதுவருடத்தில் பாடசாலைகளில் சேரும் பிள்ளைகள்தொகை மேலும் அதிகரிக்கும். அடுத்த புதுவருடத்தில் கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் புதுப்பிள்ளைகள் பாடசாலைகளில் சேரக்கூடியதாயிருக்கும். இப்பொழுது நாட்டிலுள்ள ஆசிரியர்களதும், பாடசாலைகளினதும் தொகையை நோக்குங்கால் கல்வியதிகாரிகள் பிள்ளைகள் யாவரையும் பாடசாலைகளில் சேர்க்க இயலாதநிலையிலுள்ளனர். குறிப்பிட்ட தொகையில் ஒருபகுதி மாணவர்களையே சேர்க்கக்கூடும். தற்பொழுதே பாடசாலைகளில் கல்வி பயிலத்தக்க வயதுடைய ஐந்துலட்சம் பிள்ளைகள் கல்வி பயில இயலாது இருக்கின்றனர். புதுவருடத்தில் இத்தொகை இன்னும் அதிகரிக்கும்.

அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியம் ஆக்கிய பின்பு தனிப்பட்டவர்களோ பாடசாலைகளைப் புதுக்க ஆரம்பிக்க இயலாதிருக்கின்றனர். அரசாங்கம் பொதுமக்களைப் பாடசாலைகளை ஆரம்பிக்க அனுமதியளித்தால் கல்விகற்க வசதியில்லாத பிள்ளைகள் கல்விகற்க ஏதுவாயிருக்கும். நாட்டில் வேலையில்லாது தத்தளிக்கும் பண்டிதர்கள், புலவர்கள், பட்டதாரிகள், முதலானோர்க்கும் அப்பாடசாலைகளில் ஆசிரியர்களாக வேலை கிடைக்கும். அதனால் வேலையிலாத் திண்டாட்டமும் ஓரளவு குறையும்.

அரசாங்கம் பாடசாலைகளைத் தேசிய மயமாக்கிய பின்னர் பிள்ளைகளின் கல்வித்தரமும் குறைந்துவிட்டது. பெற்றோர் தாம்விரும்பியவாறு பிள்ளைகளுக்குக் கல்வியூட்ட வசதியிலாது இடர்படுகின்றனர். ஐந்து வயதுககுட்பட்ட, வசதியுள்ளபெற்றோரின் பிள்ளைகள் நாட்டில் தனிப்பட்டவர்களால் நடாத்தப்படும் சிறுவர் பாடசாலைகளில் பணம் கொடுத்துக் கல்வி பயில்கின்றனர். ஆனால் வசதியற்ற பெற்றோரின் பிள்ளைகளோ இத்தகையபாடசாலைகளில்சேர இயலாதிருக்கின்றனர். அரசாங்கம் புதுப் பாடசாலைகளை நிறுவுதல்வேண்டும். புது ஆசிரியர்களையும் நியமித்தல்வேண்டும். அன்றேல் அரசாங்கம் தேவையான பாடசாலைகளை நியமித்து நடத்த பொதுமக்களுக்கு அனுமதியளித்து உதவியும் செய்தல்வேண்டும். அங்ஙனம் செயலாற்றத் தவறின் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் காணும் நெருக்கடி தீரவே தீராது.

x x x

## சமயக் கல்வி

*அண்மையில் இலங்கையில் கூடிய சர்வமத மகாநாட்டில் வெளியிட்ட அறிக்கையின் சமயக்கல்வி சம்பந்தமான கருத்து வருமாறு:—*

சமயக் கல்வி எல்லாப் பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுதல் வேண்டும். சமயக் கல்வியை முறைப்படி கற்பியாமையே நாட்டில் மாணவரிடையே காணப்படும் ஒழுக்கக் குறைவுக்கு முக்கிய காரணம். எல்லா வகுப்புகளினது பாட அட்டவணைகளிலும் சமய பாடத்துக்கு முக்கிய இடமளிக்கப்படுதல் வேண்டும். சமய பாடம் தகுதிவாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுதல் வேண்டும். சமய பாட ஆசிரியரின் நியமனம் அவ்வச் சமய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். முற்காலத்திலுள்ள குருசீட முறை நல்லொழுக்கத்தை விருத்தி செய்யும். ஆனால் பெருந்தொகையான மாணவர்கள் ஒரு ஆசிரியரிடம் கல்வி பயில வேண்டியிருப்பதனாலும் வாழ்க்கை முறை மாற்றமடைந்திருப்பதினாலும் குரு சீட முறைக் கல்வியை இக்காலத்தில் அனுட்டித்தல் சாத்தியமில்லை. குரு சீட முறைக் கல்வியால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் ஒரு ஆன்ம உறவு ஏற்படுகின்றது. அந்த உறவு மாணவனுடைய உள்ளத்தைத் தூய்மைசெய்து அவனை நல்லவனாக மாற்றிவிடும். அந்த உறவை இயன்றவரையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கிடையில் உண்டாக்க முயலுதல் வேண்டும்".

நேயர்கள் நெஞ்சம்

## அரசியலும் பசுவதையும்

### பசு வதையைத் தடைசெய்யும் வண்ணம் பிரதமருக்கு மனுச்செய்தல் வேண்டும்

பூமியில் ஜனித்த மனிதர்கள் யாவரும் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, என்னும் நான்கு வருணத்தவராகக் கணிக்கப்பட்டுள்ளனர். இவர்கட்குத் தனித்தனி கடமைகள்—தொழில்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவர்களுள் பிராமணர்களுக்கு வகுக்கப்பட்ட தொழில்களுள் வேட்ட (வேள்விசெய்த) லும் ஒன்றும்—வேள்வியில் பெரிதும் பயன்படுத்தப்படுவது நெய்யாகும். நெய் பலவகைப்படினும் பசுநெய்யே வேள்விக்குரியதாம்.

பசு புனிதத்தன்மை வாய்ந்த ஒரு பிராணியாகும். அதன் உடலிலே மும்மூர்த்திகளும் தேவர்களும் பிறவும் அமைந்துள்ளதாக நூல்கள் கூறுகின்றன. சாணத்திலே லக்ஷ்மி வீற்றிருப்பதாகக் கூறுவர். இறந்த புண்ணிய ஆன்மாவானது யமனுலகு எய்துகையில் பசுவின் துணைக்கொண்டே சீழும் இரத்தமும் கிருமிகள் முதலிய துஸ்ட ஜந்துக்களும் நிறைந்த வைதரணி நதி என்ற ஆற்றைக் கடக்கின்றது எனக் கெருட புராணம் செப்புகின்றது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது தேவாரத்தில் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்றார் இத்தொடரின் ஒவ்வொரு சொல்லையும் நாம் உற்று நோக்கல் வேண்டும். முதலில் வாழ்க என்றார் இம் மாநிலத்தில் நிலைத்து என்றும் வாழ்க: அவ்விதம் வாழவேண்டியவை எவையாயின் முதலாவதாக அந்தணர் என்று கூறினர். "அந்தணர் என்போர் அறுதொழில் பூண்டோரோர்" என்பது திருமந்திரம் அவையாவன, ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன இரண்டாவதாக வானவர் என்றனர். வானவர்—தேவர்கள். அந்தணர்கள் செய்யும் வேள்விக்கு — அவிப்பாகத்திற்கு உரியவர்கள் –தேவர்களே. மூன்றாவதாக ஆனினம் என்றார் – பசுக்கள் நெய்யைத்தருவன. நெய் வேள்விக்கு இன்றியமையாதது. ஆகவே பசுக்களும் வாழவேண்டும் என்றனர்.

பண்டை மக்கள் பசுவினைச் செல்வங்களுள் ஒன்றாக மதித்தனர். ஆதலாலன்றோ ஆன்றோர் "மாடில்லான் வாழ்வு ......... விழல்" என்றனர். அன்று துரியோதனனுதியர் விராடகாட்டரசனது ஆநிரையைக் கவர்ந்தமையையும் உற்று நோக்குக. தைப்பொங்கலின் மறுநாள் பசுக்களுக்குப் பொங்கலிட்டு அவைகளை வழிபடுகின்றோம் இவ்வழி எழுந்தது பட்டிப்பொங்கல். பசுவின் மகிமையையும் பசு வோம்பலையும் நன்குணரவேண்டின் பெரியபுராணத்துவரும் சண்டேசுவரநாயனார் கதையில் உள்ள ஆறுமுகநாவலர் சூசனத்திற் காண்க.

இன்று நம் நாட்டில் ஏராளமான பசுக்களை உணவிற்காகக் கொன்றுவருகின்றனர். இந்நிலையை "நாட்டின் செல்வம் நாடோறும் அழிக்கப்படுகின்றது" எனக்கூறினும் அது மிகையாகாது. இன்று நம் அரசாங்கம் பசுவதையைப் பற்றிக் கவனியாது வாளாவிருக்கின்றது.

இப் பூவுலகில் பிறக்கும் உயிர்கள் எல்லாவற்றிற்கும் தந்தையும் தாயுமாய் விளங்குபவன் ஒப்பற்ற இறைவன். அவனின் சேய்களே நாம்! அப்படி நோக்கின் பசுவும் நம் சகோதரம் அல்லவா? ஒருவனை இன்னொருவன் வன்மத்தாலோ அல்லது தற்செயலாகவோ கொலைசெய்துவிட்டால் அவனை அரசாங்கம் கொலைசெய்கின்றது. ஆனால் நம் சகோதரர்களுள் ஒன்றாகிய பசுவினைக் கொலைசெய்பவர்களை அரசாங்கம் தண்டியாமலிருப்பது ஏன்?

"மானிலங் காவலன் ஆவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனம் மிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ"

என்றனர் "சேக்கிழார்"

"மாநிலங் ......... தன் பரிசனத்தால்" என்றவிடத்துத் "தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்" என்றனர். மன்னுயிர்கட்கு அரசன் இடையூறு செய்யக்கூடாது. அரசனாலும் இடையூறு ஏற்படக்கூடாது. அஃதாவது நாம் செய்யும் செயல்களையெல்லாம் ஆன்றோர் செய்தல், செய்வித்தல், உடன்படல், என மூன்று வகையாகப் பிரித்தனர். இவ்வழி உற்றுநோக்குங்கால் "தான் அதனுக்கு இடையூறு என்பது செய்தலிலும் தன்னால் என்பது செய்வித்தலிலும் அடங்குகின்றதல்லவா? தன் பரிசனத்தால் என்பது நாட்டுமக்கள் இடையூறுசெய்வதையேயாம். அவர்கள் இடையூறு செய்தலைத் தடுக்காவிடத்து அவன் அச்செ

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சென்ற முப்பத்தாறு வருடகாலம் ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியிருக்கும் சிரேஸ்ட உதவியாசிரியராகிய சிவஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்களுக்கு ஷ்டி பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர்சங்கம் பாடசாலை மண்டபத்தில் 9-10-67 திங்கட்கிழமை பி. ப. 2-15 மணிக்கு ஒரு பாராட்டுவிழாவினை நடத்தத் தீர்மானித்துள்ளது.

## கடவுள் திருவடிவம்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

குறிக்கும். மனிதனாக அவதரித்து அத்துவாக்களின் வாயிலாக அற்புதம் புரியும் ஒருவரை நாம் நடராசருடைய திருவுருவம் எனக் கணித்தல் எங்ஙனம்? முழுமுதற் கடவுளாகிய சிவனைக் குறிக்கும் திருஐந்தெழுத்துடன் மனிதனாக அவதரித்த ஒருவருடைய பெயரைச் சமமாக மதித்து ஓதுதல் எங்ஙனம்?

நமது சைவசமய குரவர்களோ மற்றும் சந்தான குரவர்களோ தம்மை ஒருபோதும் சிவனுடைய அவதாரம் எனக் கூறியதில்லை தங்களுடைய நாமங்களைச் "சிவாயநம" எனும் மந்திரத்துடன் சேர்த்தோ அல்லது அதற்குப் பதிலாகவோ உச்சரிக்கும் வண்ணம் சைவர்களைத் தூண்டியதாக எந்தப் புராண இதிகாசங்களிலும் குறிக்கப்படவில்லை. அவர்கள் அப்படி நினைந்ததும் இல்லை. இன்றைய உலகில் ஒரு சில அவதாரபுருஷர்களின் போக்குச் சைவர்களாகியநமது சிந்தனைக் குரியதாகும்.

உண்மைச் சைவர்கள் அடியார்க்கு அடியவர்கள். ஆகவே நாம் அடியார்களை நிந்திக்கவோ புறக்கணிக்கவோ கூடாது. அதே தருணத்தில் நமது சைவசித்தாந்தம் கண்ட முடிபுக்கு முரணான கொள்கை உடையவர்களின் பிரசாரத்தில் மயங்கி விபரீதமாக நடந்து கொள்ளவும் கூடாது. அரசியல் உலகிலே நாம் பல சந்தர்ப்ப வாதிகளைக் காண்கிறோம். அதுபோல் நமது சைவ உலகிலேயும் சந்தர்ப்ப வாதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். சைவ சித்தாந்தம் காட்டும் "சிவாயநம" என்னும் மந்திரத்தில் நமக்குப் போதிய நம்பிக்கை இருப்பின் அதற்குப் பதிலாக இன்னொரு நவீன அவதார புருஷனின் மந்திரத்தை உச்சரித்துச் சமயோசிதமாகச் சுயநலங்கருதிச் சந்தர்ப்பத்துக்கேற்றாற் போல் பச்சோந்தி வடிவங்கொள்ளத் தேவையில்லை.

விஷ்ணுவின் அவதாரத்தில் நம்பிக்கையுடையவர்கள் வைஷ்ணவர்கள். நாமும் அதில்நம்பிக்கையுடையோம். ஸ்ரீ ராமாவதாரத்தில் கற்புத் தெய்வமாகிய சீதாபிராட்டி தமது தலைவனாகிய இராமபிரானையன்றி மற்றெவரையும் கண்ணெடுத்துப் பார்த்ததில்லை. சீதாபிராட்டி இராவணனால் கவரப்பட்டு அசோக வனத்திலே சிறைக்காவலில்வைக்கப்பட்டிருந்த பொழுது ஸ்ரீ ராமனுடைய திவ்விய நாமத்தையே நெடுக நினைந்து கொண்டிருந்தாள்.

தொடர்ச்சி 8-ம் பக்கம்

## கடவுள் திருவடிவம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரக்கியர்கள் அடிக்கடி இராவணனுடைய நாமத்தையே நினைவூட்டினார்கள். இதை அவள் செவிமடுக்கவில்லை. ஸ்ரீ ராமனுடைய நாமத்தை யாரிடமும் கேட்கும் வாய்ப்பு அவளுக்கு அங்கு கிடைக்கவில்லை. ஒரு நாள் நடுநிசி வேளை; பலமாதங்களாகியும் ராமன் தன்னை மீட்க வரவில்லையே என்ற ஏக்கம்; காவல் புரியும் அரக்கியர் உறங்கிய தருணம் சீதாதேவி தனது உயிரையே கழுத்திற் கொடிவிட்டு மாய்த்துக்கொள்ளலாமென ஒரு மறைவான அசோக மரத்தின் கீழ் சென்றாள். அப்பொழுது ஓர் உருவம் "ராம ராமா" என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அம்மரத்திலிருந்து கீழே குதித்தது. சீதையைக் கவர்ந்து செல்ல உதவிபுரிந்த மாரீசனும் முன்பு இப்படித்தான் "ராம ராம" என்று கூவினான். அரக்கரின் ஏமாற்றும் தந்திரத்தை அறிந்த சீதை கூட, அப்பொழுது தனது தலைவனின் நாமத்தைக் கேட்டதும் உருகி, நெகிழ்ந்து புத்துயிர் பெற்றாள். அதனால் தனக்கு முன் நின்ற அனுமனைப் பார்த்து நீ யாராக இருந்தாலும் பாதகமில்லை. அரக்கனாயிருந்தாலும் சரிதான்; அமரனாக இருந்தாலும் சரிதான், குரங்கினத் தலைவனாக இருந்தாலும் சரிதான், இந்த வேளையில் வந்து எனது பிராணனாகிய ராமனுடைய பெயரைச் சொல்லி என்னுடைய உணர்வை உருக்கி எனக்குப் புத்துயிரைக் கொடுத்தாய்! இதிலும் பார்க்க எனக்கு வேறு உதவி யாது உண்டு? ஐயனே! நீ சிரஞ்சீவியாக வாழ்வாய்! என அனுமானை வாழ்த்தினாள். அனுமானிடமிருந்து அடையாளமாகத் தனது தலைவனின் மோதிரத்தைப் பெற்று, அவனை ராமதூதனாக நம்பினாள். அவனுடைய உயர்ந்த பக்தி ஒழுக்கத்தை உணர்ந்தாள்.

எனினும் தனது தோளின் மேல் ஏற்றி சீதையை உடனே இராமனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதாக அனுமான் கேட்டபோது சீதை அதற்கு ஒருப்படவில்லை. இராமனைத் தனது தலைவனாகக்கொண்ட சீதை ராமனுடைய வீரத்தையும், ஆற்றலையும், இரட்சிக்கும் பொறுப்பையும் நம்பினாளேயன்றி அனுமானை நம்பிப் புறப்படவில்லை. இக்கதையின் உட்கருத்தை நோக்குவோம், சீதையை நமது ஆத்மாவாகவும் ராமனை நமது பதியாகவும் பாவனை செய்து வழிபடுவோம். அனுமானைப் போன்ற அடியார்கள் நமது உணர்வை உருக்கிப் புது உயிர் கொடுத்தால் அவர்களை நாம் ஆசிர்வதிப்போம். அவர்கள் சிரஞ்சீவிகளாய் இருப்பார்களாக! இராவண நாமத்தை நாம் பஜனை செய்யோம், கற்புள்ள சீதையைப்போல் நாமும் நமது பசுபதியின் அனுக்கிரகத்தையே பூரணமாக நம்பி இருப்போம். சிவாயநமவே கதி என வழிபடுவோமாக! வைத்தியநாதன் நம்மை இரட்சிப்பான். ——

## அரசியலும் பசுவதையும்

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

யலுக்கு உடன்பட்டவன் ஆகின்றான். ஆகவே அப் பாதகம் அரசனையே சாரும். நாட்டில் கொலைசெய்வோரைத் தண்டித்து பசுவதை செய்வோரைத் தண்டியாது விடுங்காலை அரசன் ஓரவஞ்சக (ஒருபக்கநியாயம் செய்பவ) னாகின்றான் இந்நிலையில் "மன்னுயிர்" காக்கப்படுகின்றதா? இல்லையே!

"மாநிலங் காவலனாவான்..........அறங்காப்பான்" என்றனர் ஓரவஞ்சகனாகிய அரசன் அறங்காப்பான் ஆவது எங்ஙனம்? ஆகவே அவன் அரசியற்றும் தகுதியற்றவனாகின்றான். சண்டுத் திருமூலர் திருமந்திரத்து வரும்,

"ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே."

எனும் பாவினையும் நோக்குக.

மேலும் இன்று நம்நாட்டில் ஜனநாயக அரசாங்கம் நடைபெறுகின்றது; அவ்வழி எல்லாப் பிரசைகட்கும் சுதந்திரம் உண்டு அப்போ வாயி (வாக்கி) ல்லாப் பிரசையாகிய பசுவுக்கு - ஆனினத்திற்கு ஏன் சுதந்திரம் அளிக்கக்கூடாது.

அன்றொருநாள் முடியாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம்-மநுநீதிகண்ட சோழர் அரசியற்றிய காலம்—அச்சோழனின் மகன் இரத வீதியில் இரதமூர்ந்து செல்கையில தற்செயலாக வீதியின் குறுக்கே பாய்ந்து சென்ற ஆன் கன்றை இரதத்தால் நெரித்துக் கொன்றான். அக்கன்றின் தாயானது சோழன் அரண்மனை வாயிலுக்குச் சென்று அங்கு தொங்கிக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கோட்டால் அசைத்துத் தன் நிலையை அரசனுக்கு உணர்த்தியது. அதன் நிலையை உணர முடியாத அரசன் மக்களிடம் வினவினான். நடந்ததை உணர்ந்தான். அறத்தை நோக்கினான்.

அவ்வழி தன் மைந்தனைக் கொலைசெய்தலே ஏற்ற தண்டனை என்பதை ஓர்ந்தான். அரசனின் ஏக புத்திரன் -வருங்காலத்து அவன் அரசுக்கு உரியவன்-அவர்கட்கு நீர்க்கடன் நீக்கடன் முதலிய புரிய அருகதையுடையவன்—இவைகளை நோக்கினானா? —பிள்ளைப்பாசம் மேலாயது என்பார்களே —அவ்வழி நின்றானா? தருமமே-அறமே பெரிதென மதித்தான்.

"ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்
தருமந் தன் வழிச் செல்கை கடன் என்று தன்மைந்தன்
மருமம் தன் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற் றெளிதோதான்"

என்பது சேக்கிழார் திருவாக்கு

முடியாட்சி இயற்றிவந்த மனுநீதி கண்ட சோழன் தன் மைந்தனையே கொன்றுவிடத்து குடியாட்சியில் பசுவதை செய்வோர்களை — நாட்டின் செல்வத்தை அழிப்போர்களை —ஏன் கொல்லக்கூடாது? இதற்கென அரசாங்கம் ஏன் பிரத்தியேகமாக ஓர் சட்டம் இயற்றக் கூடாது?

நாட்டில் பசுவதை அதிகரித்துவரும் இந்நாளில் மக்கள் அதை எதிர்க்கவேண்டும். நம் சிங்களச் சோதரர்களாகிய டக்டர் டபிள்யூ எஸ். பெர்ணாந்தோ திரு. கே ஏ. பெரேரா போன்றோர் பசுவதையை எதிர்த்துப் பிரசாரம் புரிந்துவருகின்றார்கள். அதேபோல் நமது கோரட்சக சபையும் செயலாற்றி வருகின்றது. ஆயினும் பசுவதையை நாட்டிலிருந்து அகற்றவேண்டின் பிரசாரங்களோடும் பத்திரிகைகளில் பந்தி பந்தியாய் வரைவதோடும் நின்றுவிடக் கூடாது. எங்கள் சிங்களச் சோதரர்களாகிய டக்ரர் டபிள்யூ எஸ். பேர்ணாந்தோ திரு கே ஏ. பெரேரா முதலியோருடன் 'கோரட்சக சபை' 'அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை' 'யாழ் - சைவ பரிபாலன சபை' முதலிய சபைகளும் மற்றும் சமயச் சார்புள்ள மன்றங்களும பொது மக்களும் ஒருங்கு கூடி ஓர் தூதுக் குழுவை நியமித்து கனம் பிரதம மந்திரி அவர்களையும் மற்றும் அரசியற் பிரமுகர்களையும் பேட்டி கண்டு ஆனினத்தின் மகிமையையும் அறநெறியையும் அவர்கட்கு எடுத்தோதி ஆவதையைத் தடை செய்யும் சட்டத்தை இயற்றும் வகையில் ஆவன புரிதல் வேண்டும். இவ்விதம் செயலாற்றி நாட்டில் பசுவதை தவிர்க்கப் படும் - தவிர்க்கச் சட்டம் இயற்றப் படும புனித நாளும் நம் ஈழத் திரு நாட்டின் சரித்திரத்தில் இடம் பெறுமா? அப் பொன்னாள் தான் எந்நாளோ?

"வாழ்க ஆனினம்"

வணக்கம்

— "காரை நாடன்"

மொந்திபுலம், காரைநகர்.

x x x

## விழிமின்! எழுமின்!! தேளிமின்!!!
## புனிதப்பணி நிறைவேற உழைமின்!!

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த அராலி - கிழக்கு வாலையம்பாள் ஆலயத்திலே, விஜயதசமித் திருநாளன்று, ஆடுகள் பலியிடும் வழக்கம் பல ஆண்டுகளாகத்தொடர்ந்து இருந்துவருகிறது. சைவசாத்திரங்களுக்கு முற்றும் மாறான இந்த அதிபாதகச் செயலை நிறுத்தி, ஆங்கு அருள் நெறியை வளர்க்க அராலி கிழக்கில் வாழும் சைவப் பெருமக்களும் ஷை ஆலய முகாமையாளர்களும், அயற்கிராமங்களில் வதியும் சைவசீலர்களும் இதுகாலவரை உழைக்க முன்வராதது பெரும் வேதனையைத் தருகின்றது. இந்த வழக்கத்தைத் நிறுத்தி, விஜயதசமி விழாவை புனிதமுறச் செய்யவேண்டுமென்னும் பெருவிஎண்ணம் அவ் ஊரிலுள்ளோருக்கும் அயற் கிராம மக்களுக்கும் இப்போது உதயமாகி வருகின்றது. ஆனால் எதற்கும் ஒன்றுபட்ட முயற்சி வேண்டும், எமக்கென்ன என்று எம்முட் பலர் ஒதுங்கியிருந்து கண்மூடி மௌனிகளாக வாழ்வதனாற்றான் நாட்டிலுள்ள பல அதிபாதகச் செயல்களை நீக்க முடியாதிருக்கின்றது. சைவப்பெரியோர்களே! தென் - அளவை முத்துமாரியம்மன் கோவிலைப்பாருங்கள் ஆங்கு கடந்த 250 ஆண்டுகளுக்கு மேலாகநிகழ்ந்துவந்த ஆடு,கோழி பலி இவ்வாண்டு தொடக்கம் (2-6-67) பெரும் பொங்கல் விழாவாக மாறி, அகிலத்துக்கே வழிகாட்டியதைச் சிந்தியுங்கள்.

இங்கும் இவ்வாண்டு தொடக்கமே பலியிடும்வழக்கத்தைநிறுத்த திடசங்கற்பம் எடுங்கள்! தென்-அளவை முத்துமாரியம்மன் பத்தசிலர்கள் திரண்டெழுந்து வேண்டாமிந்தக் கொடிய செயலென வெறுத்தொதுக்கி விட்டார்கள்.

இத்தகு தூயதொண்டில் நாமும் சளைத்தவர்களல்லர் என்பதை நிலைநாட்ட நாளை நாளை என்னாது இன்றே முன்வந்துழைக்கவேண்டும். இப்பகுதி மக்கள் சிந்தனையற்றவர்கள் என்று ஏனைய கிராமத்துமக்கள் எள்ளிநகையாடுவதை இனியும் பொறுக்க முடியுமா...? சைவத் தொண்டர்களே! சமய அபிமானிகளே! விழிமின்......! எழுமின்! தெளிமின்! "எல்லா உயிரும்தொழும்" இப் புனிதப் பணியை நினைமின்! கருதிய கருமம் கைகூடும்வரை ஊக்கமுடன் உழைமின்!!.

(வழிபடுவோன்)

கா. இருகுநாதன்

சாவன்மார்க்கட்டு, 28-9-67.


## Commission Sale
## கோட்டுக் கொம்மிஷன்
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில், இல. 9326

1. கரணவாய் வடக்கு வீரகத்தியார் ஆறுமுகம்
2. ஷை யூர் கந்தப்பர் கனகசபை
3. பெண் வள்ளிப்பிள்ளை

—வழக்காளிகள்

எதிராக

கரணவாய் வடக்கு வேலுப்பிள்ளை காகமுத்து கைம்பெண் பொன்னச்சி

—எதிரி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1967-ம் ஆ ஐப்பசி மீ 31 ந உ செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராச்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று இமையாணன் குறிச்சியிறை இலந்தைக்காடு கில ப. 28 3/4, ஷை கில. ப. 8 7/8 செம்பாடலொல்லை கில. ப. 11 5/8, கித்தியன் தோட்டம், தோட்டம் 1 ஷை கில. ப. 5 கூடிய கில. ப. 55 குளி 10½ எல்லை கிழக்கு ஒழுங்கையும் மயில்வாகனம் மகள் முத்தாச்சிப் பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய வாதனமும், வடக்கு ஒழுங்கை, மேற்கு மயில்வாகனம் மகள் முத்தாச்சிப்பிள்ளைக்குடைய வாதனம். தெற்கு வேலாயுதர் தம்புவின் உரிமைகாறருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலமடங்கலிற் சொரியலாய் கில ப. 4 குளி 6 165/256ல் 2/3 பங்கும் இதற்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரியபங்கும்.

| | |
|---|---|
| தீரட்சித் தொகை ரூபா. | 1703 30 |
| இதில் ரூபா 1000/- க்கு 7-10-66 தொடக்கம் 6-2-67 வரை 8 வீத வட்டி ரூபா. | 26 66 |
| ரூபா. 1729-96 க்கு 6-2-67 தொடக்கம் 4-9-67 வரை 5 வீத வட்டி ரூபா. | 50 45 |
| | 1780 41 |

ஆ. சபாரத்தினம், J. P.
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales, Value

வடலிப்பாதி, அம்பனை
பருத்தித்துறை, 27-9-67.

எம் 258. 6-10-67



யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றவரவு.

எச்சமிதி சராசரி 500ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிஜுப்பர்.

Std. 14


### அணிந்துரை அரங்கம்
### சகலகலாவல்லிமாலை

இலவச வெளியீடு-2

குமரகுருபரசுவாமிகள் பாடியருளிய சகலகலாவல்லிமாலை என்னும் சரசுவதி தோத்திரம் நவராத்திரி காலத்தில் தேவி வழிபாட்டுப் பாராயணத்துக்கு உகந்த நூல். நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாசாலை இந்துமாமன்றம் அதனை அச்சிட்டு இலவசமாக வழங்குகின்றது. எமக்கு அனுப்பிய பிரதிகளை அன்புடன்ஏற்றுக்கொண்டு நமது நன்றியையுந் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

### சிறுவர் தின விழா

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் சிறுவர்தின விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. தினமும் ஆசிரியர்களின் நலவுரைகளும் மாணவர்களின் பேச்சுக்களும் நடைபெற்றுவருகின்றன. (ந. வி.)

### மும்முறை அரவம் தீண்டியது

மாதகலைச் சார்ந்த சுந்தர் சின்னத்தம்பி என்னும் வயோதிபருக்கு ஒரே கட்டும்பொழுது மும்முறை செட்டிநாகம் கடித்தது. அவர் உடனே கொட்டடி பாம்புக்கடி நிபுணர் க. சிற்றம்பலத்தின் இல்லத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு வைத்தியம் செய்யப்பட்டார். மூன்றுநாட்கள் மயக்கமுற்ற நிலையிலிருந்து பின் உயிர் பிழைத்துள்ளார். —— (ந. வி.)

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு; க. செ த. செ, செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1—4—65 முதல் 31—3—66 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 8—11—67 புதன்கிழமை காலை 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிறங்கலாக மிகுதி நகைகள் ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

C. Ragunathan
Auctioneer

7—1—67

எம், 262, 13, 6—10 -13—10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

1. வேலுப்பிள்ளை பொன்னையாவும் (காலம்சென்றுபோனார்) அவர் 2. மனைவி சின்னம்மாவும் இருவரும் உரும்பிராய்
இல. M B. 5139 எதிராக —வழக்காளிகள்
1. செல்லையா கந்தையாவும் அவர் 2. மனைவி மீனாட்சியும் இருவரும் தின்னவேலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 5139-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1967-ம் ஆ கார்த்திகை மீ 11-ந் உ சனிக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 13,212/50-ம் 4-10-62 தொடக்கம் 1-9-64 வரைக்கும் ரூபாய் 10500-க்கு 10 சத விதம் வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 சத விதம் வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 377/46 சதமும் இதில் முன்கட்டிய தொகை ரூபாய் 5350-ம் கழித்து.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று தின்னவேலி இறை "செம்மணக்காடு" நிலப்பரப்பு 5-ம் கல்வீடுகள் இரண்டும் வான்பயிர் வளர்பயிர்களும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் எல்லை:— கிழக்கு கையொழுங்கை வடக்கு நாச்சிமாகோவில் வீதி மேற்கு மருதையர் குருசாமிக்குரிய ஆதனம் தெற்கு ஆறுமுகம் துரைசாமி கைம்பெண் தையல்நாயகத்தினுதனம் இதடங்கலும் தெற்கெல்லையிலிருக்கும் வழிப்பாவினை உரித்து பிறங்கலாய்.

ச. அ. மரியாம்பிள்ளை,
28/2, மூன்றும் குறுக்கு வீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம். (எம். 256 6-10-67,)
30—9—67,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அரெழு: நடராசா கைம்பெண் கண்மணி —வழக்காளி
இல. M B. 8012 எதிராக
மானிப்பாய் வடக்கு தன்னை சின்னத்தம்பி வயித்திலிங்கம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 8012-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1967-ம் ஆ ஐப்பசி மீ (அக்டோபர்) 14-திகதி (14-10-67) சனிக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை;—முதல் வட்டி ரூபாய் 2821-85-ம் இதில் ரூபாய் 1750-க்கு 21-2-66 திகதி தொடக்கம் 14-12-66 வரைக்கும் 100-க்கு 10 வித வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வித வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 321-38 சதம்,

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவில்பற்று சங்குவேலியிறை 'தரையன் தோட்டம்" நிலப்பரப்பு காலு (4-ம்) வீடும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு நன்னியன் பெண் பாறுவின் ஆதனம் வடக்கு முருகன் கணபதியின் ஆதனம் மேற்கும் தெற்கும் ஒழுங்கை இதடங்கலும் ஆனால் குறித்த கிணற்றில் கிழக்கெல்லைக் காணிக்குரிய பங்கு புறநீங்கல்.

தெல்லிப்பழை சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
15—8—1967. கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 257, 6—10— ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி கோர்ட்டு வெஸ்துக் கோட்டில்

சரசாலை தம்பிமுத்து தர்மலிங்கம் —வழக்காளி
இல. 1778 எதிராக
மந்துவில் கேலம் சுப்பர் செல்லத்துரை —எதிராளி

சாவகச்சேரி கோர்ட்டு வெஸ்துக் கோட்டில் 1778-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ்க்காணும் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனம் 1967 ம் ஆ கார்த்திகை மீ 13-ந் உ திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா. 350/ ம் 9-6-66 தொடக்கம் 15-9-66 வரைக்கும் நூற்றுக்கு 12 வித வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும்வரைக்கும் 5 (ஐந்து) வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா. 50-35 சதம். இதில் கொடுபட்ட செலவு ரூபா. 35/- கழித்து மிகுதி.

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சரசாலையிறை கட்டைக்காடு வயல் நெற்பரப்பு 75. எழுபத்தைந்துக் கெல்லை கிழக்கு காங்கேசு பெண் மாணிக்கத்துக்குரிய வாதனம், வடக்கு வேலுப்பிள்ளை கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம், மேற்கு இளையதம்பி கைம்பெண் முத்துப்பிள்ளைக்குரிய வாதனம் தெற்கு நடராசா ஐயர் சுப்பிரமணியக் குருக்களுக்குரிய வாதனம் இதடங்கலிற் சொரியலாய் நெ. பர, 20-

நுணாவில் மேற்கு, செல்லையா குமாரசிவம்,
சாவகச்சேரி, 30-9-1967. கொம்மிஷனர்.
எம். 260 6-10-67

## நவராத்திரி விழா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகர் இந்துக்கல்லூரியில்

காரைநகர் இந்துக் கல்லூரியில் ஷை விழா ஷை கல்லூரிச் சங்கீத சபையினரால் கல்லூரி அதிபர் ஆசிரியர் மாணவர் ஆகியோரின் அநுசரணையுடன் 4-10-67 முதல் 13-10-67 வரை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெறும்,

ஷை தினங்களில் இன்னிசைக் கச்சேரி, உபந்நியாசம் என்பனவும் இடம் பெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

க சின்னத்தம்பி ஆறுமுகம் காரைதீவு கிழக்கு —வழக்காளி
இல. M B. 7161

எதிராக

1. ஆறுமுகம் கந்தையா
2 மனைவி செல்லாச்சிப்பிள்ளை (மணம்) இருவரும், காரைதீவு கிழக்கு, 3. ஆறுமுகர் கந்தையா (காலஞ்சென்ற தன் மனைவி செல்லாச்சிப்பிள்ளையின் சட்டப் பிரதிநிதியாக முதலாம் எதிரி)

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 7061-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகள் 1967-ம் ஆ கார்த்திகை மீ 8-ந் உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 981 சதம் 80-ம் 17-11-64 தொடக்கம் 24-8-65 வரைக்கும் ரூபாய் 633 சதம் 50-க்கு 8 வித வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 354 சதம் 60-ம் அதாவது ஏற்பட்ட செலவு 264 ரூபாய் 70 சதம் வெலியாத்துச் செலவு ரூபாய் 39 இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபாய் 37 சதம் 10 முத்திரைச் செலவு ரூபா 13 சதம் 80.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பற்றுப்பகுதி காரைதீவு கிழக்கு இறையில் "சிறுபுலம்" என்ற பெயருடைய காணி நிலப்பரப்பு 16, குளி 15½ யும் மேற்படி "நாவல் நின்ற புலம்" என்ற பெயருடைய துண்டும் நிலப்பரப்பு 6 குளி 7½ யும் இவ்விரு துண்டுகளும் மொத்தமாக நிலப்பரப்பு 23 குளி 5 ம் கிணறும் செய்பயிர் வான் பயிர்களும்.

எல்லை:— கிழக்கு முருகர் சின்னக்குட்டியுடையதும் கணபதிப்பிள்ளை கைம்பெண் பாக்கியத்தினுடையதும் ஆதனம் வடக்கு: ஆறுமுகர் பெண் சுந்தரத்தின் ஆதனம் மேற்கும் தெற்கும் றோட் இதில் முழுவதிலும் சொரியலாய் 5/6 பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்

மேற்படி பீவிலி என்றும் பெயருடைய காணி நிலப்பரப்பு 3½ அளவைக்கு இணங்க நிலப்பரப்பு 3 குளி 6, எல்லை:
கிழக்கு தண்ணீர் வாய்க்கால்
வடக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் மீனாட்சியின் ஆதனம்
மேற்கு சின்னத்தம்பி ஆறுமுகத்தின் ஆதனம்
தெற்கு கனகசபாபதிப்பிள்ளை மடம் ஆதனம் இதில் சொரியலாக 2/3 பங்கும் உள்ளதும உடையதும்.

எ. பி பி எதிர்மன்னசிங்கம்
கோமிசனர் விலைமதிப்பாளர்
டிஸ்திறிக் கோட், யாழ்ப்பாணம்.
107 பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
24 ஆவணி 1967:
எம். 255 6-10— )

## Commission Sale

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு வழக்கு இலக்கம் 8906.
1 கரணவாய் வடக்கு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
2. பெண் பரமேஸ்வரி — வழக்காளிகள்.
எதிராக
1, இமையாணன் செல்லையா சிதம்பரப்பிள்ளை —எதிராளி,

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டால் எனக்கனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்க்காணும் 1-ம் 2-ம் 3-ம் ஆதனங்களை 1967 ம் ஆ கார்த்திகை மீ 4-ம் (4-11-67) திகதியிலும் 4 ம் ஆதனத்தை கார்த்திகை மீ 5 ம் திகதியிலும் முறையே (சனி ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9-30 மணியளவில் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று

1. உடுப்பிட்டி இறை அவையத்தான் தோட்டம் நில பர 11¾ ஆனால் ஆட்சிப்படி இலா 12¾ இதில் பரிவிடலாட்சிப்படி கிழக்குப்புறமாக நி பர 5 ல் பிரிவிடலாட்சிப்படி நில பர 2 குளி 8¼ இதில் பிரிவிடலாட்சிப்படி நி பர 1 குளி 4, 7/8 இதில் தெற்குப்புறமாக குளி 1¼ நீக்கி மிகுதிக்கு நி பர 1 குளி 3, 3/8 எல்லை கிழக்கு செல்லையா இளையதம்பி மறுநாமம் சாமிக்குடையவாதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு அய்யாச்சாமி பெண் வள்ளிப்பிள்ளைக்குடைய வாதனம், தெற்குப் பின் சொல்லப்படும் 2 ம் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கல் வீடு குசினி மற்றும் செய்பயிர் வான் பயிர் அடங்கலும் பெறுமதி ரூபா 11,000/-

2. ஷை யிறை அவையத்தான் தோட்டம் நி பர 2 குளி 8½ ல் மேற்குப் புறமாக சிந்தமான நி பர 1 குளி 4, 7/8 இதில் தெற்குப் புறமாக ஒழுங்கைப் பாவிப்புக்காக விடப்பட்ட நிலம் குளி 1¼ எல்லை கிழக்கு செல்லையா இளையதம்பி மறுநாமம் சாமிக்குடைய வாதனம் வடக்கு மேற் சொல்லிய 1 ம் ஆதனம். மேற்கு கையொழுங்கொங்கை. தெற்கு செல்லையா செல்லத்துரை பெண் பசுபதிக்குடையவாதனம. இவ்வெல்லைக்குட்பட்டவை யடங்கலிற் சொரியலாய் அரைவாசியும், பெறுமதி ரூபா 150/—,

3. ஷை மாகாணம் ஷை டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலிக் கோயிற்பற்று நீர்வேலி இறை ஒலுகோடை நி பர 1 ஆட்சிப்படி 12, 1/2 இதில் ஒழுங்கைக்காக 1/4 பரப்பு நீக்கி மிகுதியில் கிழக்குப்புறமாக மூன்றிலொரு பங்குக்கு நில பர 4 குளி 1, 1/2 இதில் வடக்குப் புறமாக நில பர 1 குளி ⅜ நீக்கி அதற்கடுத்த தெற்குப் புறமாக நில பர 1 குளி 3/8 எல்லை கிழக்கு றோட்டு வடக்கு செல்லையா இளையதம்பி மறு நாமம் சாமிக்குடைய வாதனம் மேற்கு சிதம்பரி சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். தெற்கு செல்லையா அருணாசலத்துக்குடைய வாதனம், இதடங்கலும், பெறுமதி ரூபா 5000/-

4. ஷை பச்சிலைப்பள்ளி கரைச்சிபகுதி முரசுமோட்டை இறை முரசுமோட்டைக்காடு ஏக்கர் 16 ஏக்கர் 1. ஷை ஏக்கர் 2½ கூடிய ஏக்கர் 19, 1/2 கிணறும் எல்லை கிழக்கு கனகரத்தினசவல ஆறு வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையாவுக்குடையவாதனம், மேற்கு வாய்க்கால். தெற்கு ஆழ்வாப்பிள்ளை மாணிக்கத்துக்கும் பெண் பூரணத்துக்குமுடையவாதனம். இதடங்கலிற் சொரியலாய் ஏக்கர் நாலே முக்காலும் பெறுமதி ரூபா 2000/—

தீர்வைத் தொகை ரூபா: —11975-00. ரூபா 10,000 க்கு 6 வீத வட்டி 22-11-65 தொடக்கம் 28-5-66 வரை ரூபா 411-42 ரூபா 12386-62 க்கு 5 வீதவட்டி 29-5-66 — 7-8-67 ரூபா 734-59 செலவு தொகை ரூபா 303-98. கட்ட வேண்டிய தொகை ரூபா 13425-19.

கா. முத்துக்குமாருஐயர்.
சங்கிறிவேல், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
பருத்தித்துறை. 27-9-67, Commissioner of Sales& Valuer.
M. 254 6-10-67

## பிஸ்கால் விற்பனை

இலக்கம் 328 / M'sc.

யாழ்ப்பாணம் பிஸ்கால் ஆபிசில்

பருத்தித்துறை மாவட்டக் கோட்டில்
பருத்தித்துறை விஜயரத்தினம் பெண் ஜோசேபின் —வழக்காளி
விரோதமாக
காரைநகர், நீலிப்பந்தனை நல்லதம்பி விஜயரத்தினம் —எதிராளி

இதன் கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் எதிராளியாகிய நல்லதம்பி விஜயரத்தினத்துக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1967-ம் ஆ ஐப்பசி மீ 31-ந் உ முற்பகல் பத்து (10-00) மணியளவில் பிரசித்த வெந்திசில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதாவது:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுபகுதி காரைதீவு கோவில்பற்று காரைதீவு வடக்கு இறை 'நீலிப்பந்தனை" நில பர 7, குளி 3, 1/2 யும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு செல்லையா இராசையா, வடக்கு முருகேசு பெண் மங்கையற்கரசியும் பங்காளரும் மேற்கு ஒழுங்கை, தெற்கு நல்லதம்பி விஜயா சரஸ்வதி இதடங்கலும் வடக்குத் துண்டு.

அறவிடப்படவேண்டிய தொகை:—ரூபா. 5480-ம் அதை இறுக்கும்வரை சட்டப்படி வட்டியும் செலவு ரூபா 397/70-ம் பிஸ்கால் சலாரும பவுண்டேச்சும் அறவிடப்படும்.

யாழ்ப்பாணம், (ஒப்பம்) தா. ச. வேதநாயகம்.
22-9-67, எம். 259, 6-10— ) வடமாகாண பிசுக்காலுக்காக.

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால் 6—10—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.